# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# நான்காம் பத்து
# நியமிக்கும் நாரணனிடம் கைங்கர்ய பலமான இதர விஷய விரக்தியைப் பெறுதல்

## முதல் திருவாய்மொழி - ஒரு நாயகம்
## 'ஐஶ்வர்யம் அற்பமாய் நிலையற்றதாய் இருப்பது, ஆத்மாநுபவம் தாழ்ந்தது, பகவதநுபவமே தலை சிறந்தது' என்று பிறர்க்கு உபதேசித்தல்

** ஒரு நாயகமாய் * ஓட உலகுடன் ஆண்டவர் *
கரு நாய் கவர்ந்த காலர் * சிதைகிய பானையர் **
பெரு நாடு காண * இம்மையிலே பிச்சை தாம் கொள்வர் *
திரு நாரணன் தாள் * காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ 1

உய்ம்மின் திறை கொணர்ந்து * என்று உலகாண்டவர் * இம்மையே
தம் இன் சுவை மடவாரைப் * பிறர் கொள்ளத் தாம் விட்டு **
வெம் மின் ஒளி வெயில் * கானகம் போய்க் குமை தின்பர்கள் *
செம் மின் முடித் திருமாலை * விரைந்து அடி சேர்மினோ 2

அடி சேர் முடியினர் ஆகி * அரசர்கள் தாம் தொழ *
இடி சேர் முரசங்கள் * முற்றத்து இயம்ப இருந்தவர் **
பொடி சேர் துகளாய்ப் போவர்கள் * ஆதலில் நொக்கென *
கடி சேர் துழாய் முடிக் * கண்ணன் கழல்கள் நினைமினோ 3

நினைப்பான் புகில் கடல் எக்கலில் * நுண்மணலின் பலர் *
எனைத்தோர் உகங்களும் * இவ்வுலகு ஆண்டு கழிந்தவர் **
மனைப்பால் மருங்கற * மாய்தல் அல்லால் மற்றுக் கண்டிலம் *
பனைத் தாள் மத களிறு அட்டவன் * பாதம் பணிமினோ 4

பணிமின் திரு அருள் என்னும் * அம்சீதப் பைம்பூம் பள்ளி *
அணி மென்குழலார் * இன்பக் கலவி அமுதுன்டார் **
துணி முன்பு நாலப் * பல் ஏழையர் தாம் இழிப்பச் செல்வர் *
மணி மின்னு மேனி * நம் மாயவன் பேர் சொல்லி வாழ்மினோ 5

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது * மா மழை மொக்குளின் மாய்ந்து மாய்ந்து *
ஆழ்ந்தார் என்றல்லால் * அன்று முதல் இன்று அறுதியா **
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் * என்பதில்லை நிற்குறில் *
ஆழ்ந்தார் கடற் பள்ளி * அண்ணல் அடியவர் ஆமினோ 6

ஆம் இன் சுவை அவை * ஆறோடு அடிசில் உண்டு ஆர்ந்த பின் *
தூ மென் மொழி மடவார் இரக்கப் * பின்னும் துற்றுவார் **
ஈமின் எமக்கொரு துற்று என்று * இடறுவர் ஆதலின் *
கோமின் துழாய் முடி * ஆதி அஞ்சோதி குணங்களே 7

குணங்கொள் நிறை புகழ் மன்னர் * கொடைக் கடன் பூண்டிருந்து *
இணங்கி உலகுடன் ஆக்கிலும் * ஆங்கு அவனை இல்லார் **
மணங்கொண்ட போகத்து மன்னியும் * மீள்வர்கள் மீள்வில்லை *
பணங்கொள் அரவணையான் * திரு நாமம் படிமினோ 8

படி மன்னு பல்கலன் பற்றோடு அறுத்து * ஐம்புலன் வென்று *
செடி மன்னு காயம் செற்றார்களும் * ஆங்கு அவனை இல்லார் **
குடி மன்னும் இன் சுவர்க்கம் எய்தியும் * மீள்வர்கள் மீள்வில்லை *
கொடி மன்னு புள் உடை * அண்ணல் கழல்கள் குறுகுமினோ 9

குறுக மிக உணர்வத்தொடு நோக்கி * எல்லாம் விட்ட *
இறுகல் இறப்பு என்னும் * ஞானிக்கும் அப்பயன் இல்லையேல் **
சிறுக நினைவதோர் பாசம் உண்டாம் * பின்னும் வீடில்லை *
மறுகல் இல் ஈசனைப் பற்றி * விடாவிடில் வீடு அஃதே 10

** அஃதே உய்யப் புகும் ஆறென்று * கண்ணன் கழல்கள் மேல் *
கொய் பூம் பொழில் சூழ் * குருகூர்ச் சடகோபன் குற்றேவல் **
செய் கோலத்து ஆயிரம் * சீர்த் தொடைப் பாடல் இவை பத்தும் *
அஃகாமல் கற்பவர் * ஆழ் துயர் போய் உய்யற்பாலரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---